www.Padasalai.Net www.Trb Tnpsc.com

# 10

# தமிழ்

மு. சந்திரவமணி, ப.ஆ,
அ ஆ மேநிப., அவிநாசி

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

# பத்தாம் வகுப்பு - தமிழ்

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

## இயல்கள் 4, 5, 6

### குறுவினாக்கள்

1. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு வெளிவந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

* போக்குவரத்து ஊர்திகள்
* இயந்திர மனிதன்

2. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியைக் காண ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் காலவழுவமைதி ஆனது எவ்வாறு?

* 'செல்வேன்' என்று வரவேண்டும்.
* செல்வது உறுதி என்பதால் காலவழுவமைதி.

3. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பங்கினை எழுதுக.

* மருத்துவர் நோயாளியிடம் அன்பு காட்டவேண்டும்.
* நோயாளி மருத்துவரிடம் நம்பிக்கை வைக்க வேண்டும்.

4. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி குறிப்பிடுக.

* நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம்.

5. சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்து கத்துவானே தவிர கடிக்கமாட்டான்' - இதில் உள்ள திணைவழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

* கேட்பான் ⇒ கேட்கும்
* கத்துவானே ⇒ கத்துமே
* கடிக்கமாட்டான் ⇒ கடிக்காது

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

6. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காடப் புலவன் தென்சொல்" – இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

* கழிந்த பெரும் கேள்வியினான் ⇒ குசேல பாண்டியன்
* காதல்மிகு கேண்மையினான் ⇒ இடைக்காடனார்

7. செய்குதம்பிப் பாவலரின் கல்விபற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

* அருளைப் பெருக்குவோம்! அறிவைத் திருத்துவோம்!
* அறிவைக் கொடுக்கும் கல்வியைப் போற்றுவோம்!
* அறியாமை அகற்றும் கல்வியைப் போற்றுவோம்!
* உயிரின் துணையான கல்வியைப் போற்றுவோம்!

8. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அமர் + த் (ந்) + த் + ஆன்

* அமர் ⇒ பகுதி
* த் ⇒ சந்தி (ந் - விகாரம்)
* த் ⇒ இறந்தகால இடைநிலை
* ஆன் ⇒ ஆண்பால் வினைமுற்று விகுதி.

9. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.

* நான் கற்க விரும்பும் மொழி இந்தி
* வேலைவாய்ப்பு பெற உதவும்.

10. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? ⇒ அறியா வினா

மின்சாரம் இருக்கிறதா? இல்லையா? ⇒ ஐய வினா

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

11. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

* முதற்பொருள்

(i) நிலம் ⇒ காடு

(ii) பொழுது ⇒ மழைக்காலம், மாலை

* கருப்பொருள்

உணவு ⇒ வரகு

12. "நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்" என்று சேகர் என்னிடம் கூறினான். - இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.

* முன்தினம் தான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்ததாக சேகர் என்னிடம் கூறினான்.

13. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்' காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' - கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

* உன்னுடைய பொய்யான வாழ்வு முடிந்து விட்டது. அதைக் காண எழுந்திரு.

* எமதூதர் கையில் உறங்குவாய்.

14. முதற்பொருள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

* 2 வகைப்படும்

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

* (i) நிலம் (ii) பொழுது

www.Padasalai.Net

15 சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
www.Padasalai.Net www.Trb Tnpsc.com
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

* ஒல்லியான தண்டு மலரைத் தாங்குகிறது.
* மென்மையான அன்பே உலகைக் காக்கிறது.

16 கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

உழவர்கள் மலையில் உழுதனர்.
முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

* குறவர்கள் மலையில் தேன் எடுத்தனர்
* நெய்தல் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

17. மூவிடங்கள் யாவை?
* தன்மை * முன்னிலை * படர்க்கை.

18 அன்பின் ஐந்திணைகள் யாவை?
*குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

19. முல்லை நிலத்தின் கருப்பொருள்கள் 4 எழுதுக.
தெய்வம் ⇒ திருமால்
பூ ⇒ முல்லைப் பூ
பண் ⇒ முல்லைப் பண்
யாழ் ⇒ முல்லை யாழ்

20. மொழிபெயர்ப்பு என்றால் என்ன?
ஒரு மொழியில் உள்ளதை, வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு ஆகும்.

21. சதாவதானம் என்றால் என்ன?
* சதம் ⇒ நூறு
* பலர் முன்பு, நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்வது.

22 பெப்பர் - குறிப்பு வரைக
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
* ஜப்பானின் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன்.
* வீடு, வணிக நிறுவனம், உணவு விடுதிகளில் பயன்படுகிறது.

www.Padasalai.Net

## சிறுவினாக்கள்

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

1. 'மாளாத காதல் நோயாளன் போல்' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

* மாளாத காதல் நோயாளன் ⇒ குலசேகராழ்வார்
* நோயாளியின் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்தாலும் நோயாளி மருத்துவரை நேசிப்பார்.
* அதுபோல, வித்துவக் கோட்டில் உள்ள அன்னையே! நீ எனக்கு நீங்காத துன்பத்தைத் தந்தாலும், நான் உனது அருளை நோக்கியே வாழ்கிறேன்.

2. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

* இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன.
* வேலை எளிதாகிறது.
* கால விரயம் இல்லை.
* ஆக்கத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.
* அழிவிற்குப் பயன்படுத்தக் கூடாது.

3. வழுவமைதிகள்

* இலட்சுமி கூப்பிடுகிறாள் ⇒ திணை வழுவமைதி
* இதோ சென்று விட்டேன் ⇒ கால வழுவமைதி
* துள்ளிய குட்டி ⇒ மரபு வழுவமைதி
* என்னடா ⇒ திணை வழுவமைதி
* நீயும் இவனும் விளையாடுங்கள் ⇒ திணை வழுவமைதி
* நீரைக் குடித்தான் ⇒ திணை வழுவமைதி

4. வழு எத்தனை வகைப்படும்? அவையாவை?

* வழு 7 வகைப்படும்.
* திணை, பால், இடம், காலம், மரபு, வினா, விடை வழுக்கள்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

5. மன்னன் இடைக்காடனார் என்ற புலவருக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

* இடைக்காடனார் பாடிய கவிதையை மன்னன் அவமதித்தான்.
* இடைக்காடனார் இறைவனிடம் முறையிட்டார்.
* இறைவன் கோவிலை விட்டு நீங்கினார்.
* இதை அறிந்த மன்னன் மனம் வருந்தினான்.
* இறைவன் அருளைப் பெற புலவருக்குச் சிறப்புச் செய்தான்.

6. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

* கல்வி கண் போன்றது.
* கல்வியே சிறந்த செல்வம்
* இளமையில் கற்க வேண்டும்.
* நல்ல வாழ்க்கை வாழ கல்வி அவசியம்.
* உயிரின் துணை கல்வி.
* பெற்றோர் மனம் மகிழ கல்வி கற்க வேண்டும்.

7. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
— இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

* ஆற்றுநீர்ப் பொருள்கோள்
* ஆற்றுநீரின் போக்கைப் போல, நேராகப் பொருள் கொள்ளுமாறு அமைந்தால் அது ஆற்றுநீர்ப் பொருள்கோள்.
* முயற்சி செல்வத்தைக் கொடுக்கும்; முயற்றின்மை வறுமையைக் கொடுக்கும்.
* நேராகப் பொருள் கொள்ளுமாறு இந்தக் குறள் உள்ளது. எனவே, இது ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

8. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

* காலில் கிண்கிணிச் சிலம்புகள் ஆடின.
* இடையில் அரைநாண், அரைவடம் ஆடின.
* நெற்றியில் பொட்டும் வட்டச்சுட்டியும் ஆடின.
* காதில் குழையும் குண்டலமும் ஆடின.
* உச்சிக் கொண்டையில் முத்துகள் ஆடின.

9. "கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப்பகுதியில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன." - காலப் போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.

* கடற்கரையில் இன்றும் உப்புக்காய்ச்சுதல் நடை-
- பெறுகிறது.
* மலைப்பகுதிகளில் மலைப் பயிர்களும், நிலப்பகுதியில் உழவுத்தொழிலும் இன்றும் நடைபெறுகின்றன.
* நவீனத் தொழில்நுட்பத்தால் தரம் உயர்ந்து உள்ளது.
* விளைச்சல், உற்பத்தி பெருகி உள்ளன.
* திணைநிலைத் தொழில்களின் வளர்ச்சி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி உள்ளது.

10. (i) பரத நாட்டியம் பற்றிக் கூறுக.

* தென்னிந்தியக் கலை
* பரதமுனிவர் உருவாக்கிய கலை.
* வேறு பெயர்கள் : கூத்து, ஆடல், நாட்டியம்.

(ii) கரகாட்டம் பற்றிக் கூறுக.

* பாரம்பரியக் கலை
* கரகச் செம்பை தலையில் வைத்து ஆடுவர்
* வேறுபெயர்கள் : கரகம், கும்பாட்டம்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

இந்தக் காட்சி ...

கண்களுக்கு அழகு

கருத்துக்கு விருந்து

மனதிற்கு இனிமை

சிந்தைக்குச் செழுமை

நயமான காட்சி

நவிலும் நல்கருத்து

- - - - - - - - - - - - - - - -

- - - - - - - - - - - - - - - -

(படத்திற்கு ஏற்ற வரிகள்)

## இயல் 4

அலைபேசி மோகம்

ஆபத்தாய் முடியும்.

## இயல். 5

மரத்தின் மகத்துவம்

அறிவாய் மனிதா.

## இயல். 6

மக்களை மகிழ்விக்கும்

அற்புத ஆட்டம் ஒயிலாட்டம்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

## நெடுவினாக்கள்

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

1. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேநீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

* ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேநீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளும்.
* வெறும் வணிகத்துடன் நின்று விடாது.
* எதிர்காலத்தில் ரோபோவிடம் குழந்தையை ஒப்படைத்து-விட்டு அலுவலகம் செல்லும் பெற்றோரைப் பார்க்க முடியும்.
* வயதானவர்களுக்குத் துணையாக ரோபோ இருக்கும்.
* மனிதர் செய்ய இயலாத செயல்களைச் செயற்கை நுண்ணறிவு செய்யும்.
* கல்வி, மருத்துவம், போக்குவரத்து, பாதுகாப்பு, வணிகம் என அனைத்துத் துறைகளிலும் மனிதருக்கு மாற்றாக செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது.
* செயற்கை நுண்ணறிவை நமக்குத் தொழிலாளியாக வைத்துக் கொள்ள வேண்டும்; முதலாளி ஆக்கிவிடக் கூடாது.
* தொழில்நுட்பத்தை அளவாகப் பயன்படுத்தினால் ஆனந்தமாக வாழலாம்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

2. இறைவன், இடைக்காடன் தொடர்புடைய நிகழ்வை நயத்துடன் எழுதுக.

* இடைக்காடனார் குசேல பாண்டியனிடம் சென்று கவிதை பாடினார்.
* இடைக்காடனார் பாடிய கவிதையை மன்னன் அவமதித்தான்.
* இடைக்காடனார் இறைவனிடம் முறையிட்டார்.
* இறைவன் கோவிலை விட்டு நீங்கினார்.
* இதை அறிந்த மன்னன் மனம் வருந்தினான்.
* இறைவன் அருளைப் பெற புலவருக்குச் சிறப்புச் செய்தான்.
* இறைவன் மீண்டும் கோவிலுக்குத் திரும்பினார்.
* மன்னன் மனம் மகிழ்ந்தான்.
* புலவரும் கோபம் தணிந்தார்.

---

## நிற்க அதற்குத் தக

1. தொலைக்காட்சி, திறன்பேசி, காணொலி விளையாட்டு, சமூக ஊடகங்கள் எனக் கற்பனை உலகில் மிதப்பவர்களை நெறிப்படுத்த நீ என்ன முயற்சிகளை மேற்கொள்வாய்?

* கதிர்வீச்சின் கேடுகளை உணரச் செய்தல்.
* மாலையில் கூடி விளையாடுதல் ஈடுபடச் செய்தல்
* படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல்.
* உறவினரோடு தொடர்பில் இருக்கச் செய்தல்.
* உலகச் செய்திகளை அறியச் செய்தல்.
* செடிகள், மரங்கள் வளர்க்கச் செய்தல்.
* வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்லுதல்.
* குடும்பத்தினரோடு உரையா[illegible] செய்தல்

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

2. பள்ளியிலும் வீட்டிலும் உன் செயல்பாடுகளை அட்டவணைப்படுத்துக.

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| 1. நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுவேலைகளைப் பகிர்ந்து செய்வேன். |
| 2. ஆசிரியர்களை மதிப்பேன். | பெரியவர்களை மதிப்பேன் |
| 3. பள்ளியைத் தூய்மையாக வைத்திருப்பேன் | வீட்டைத் தூய்மையாக வைத்திருப்பேன். |
| 4. பாடங்களை நன்கு படிப்பேன் | வீட்டுப்பாடங்களை உடனுக்குடன் முடிப்பேன். |
| 5. நல்ல சொற்களைப் பேசுவேன் | பொறுப்பாக நடந்து கொள்வேன் |
| 6. நல்ல மாணவன் என்ற பெயரை எடுப்பேன். | நல்ல மகன் என்ற பெயரை எடுப்பேன். |

3. கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் என்ன செய்வீர்கள்?

* பிறந்தநாள் விழாவில் மயிலாட்டம் ஏற்பாடு செய்வேன்.
* குடும்ப விழாவில் பொம்மலாட்டம் ஏற்பாடு செய்வேன்
* திருமண விழாவில் பொய்க்கால் குதிரை ஆட்டம் நடத்துவேன்
* விளையாட்டு விழாவில் புலியாட்டம் நடத்துவேன்.
* கோவில் விழாவில் கரகாட்டம், ஒயிலாட்டம் நடத்த ஏற்பாடு செய்வேன்.
* விடுமுறை நாட்களில் தெருக்கூத்து நடத்த ஏற்பாடு செய்வேன்.
* நண்பர்களுடன் சேர்ந்து சிலம்பாட்டம் கற்பேன்.
* கலைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவேன்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

# அணி இலக்கணம்

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

1. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

* தன் + குறிப்பு + ஏற்றம்
* இயல்பாக நடக்கும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி.
* சான்று

"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட"

* கொடிகள் காற்றில் அசைவது இயல்பு. கோவலனையும் கண்ணகியையும் மதுரைக்குள் வர வேண்டாம் என்று கொடிகள் அசைந்ததாகக் கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுகிறார்.
* எனவே, இது தற்குறிப்பேற்ற அணி.

2. நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

* நிரல் ⇒ வரிசை, நிறை ⇒ நிறுத்துதல்.
* சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, அந்த வரிசைப்படி பொருள் கொள்வது நிரல்நிறை அணி.
* சான்று

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

* அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறியதால் இது நிரல்நிறை அணி.

3. தீவக அணியின் வகைகள் யாவை?

* தீவக அணி 3 வகைப்படும்.
* 1. முதல்நிலைத் தீவகம் 2. இடைநிலைத் தீவகம் 3. கடைநிலைத் தீவகம்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

4. தீவக அணியை விளக்கி, சான்று கூறுக.

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

* தீவகம் ⇒ விளக்கு
* ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கு, அங்குள்ள பல பொருள்களுக்கு வெளிச்சம் தருகிறது.
* அது போல, செய்யுளில் ஓர் இடத்தில் உள்ள சொல், செய்யுளில் உள்ள பல சொற்களோடு பொருந்திப் பொருள் தருவது தீவக அணி ஆகும்.
* சான்று

சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்
- - - - - - - - - - - - - - - - - - - -
- - - - - - - - - - - - - - - - - - - -
மிசை அனைத்தும் புள்குலமும் வீழ்ந்த.

* 'சேந்தன' என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்துச் சொற்களோடும் பொருந்திப் பொருள் தருகிறது. * எனவே, இது தீவக அணி.

5. தன்மையணியைச் சான்றுடன் விளக்குக.

* ஒரு பொருளின் இயல்புத் தன்மையை, கேட்பவர் மனம் மகிழுமாறு, உரிய சொற்களை அமைத்துப் பாடுதல் தன்மையணி ஆகும்.
* சான்று

மெய்யில் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் ...

* உடம்பில் தூசி, விரித்த தலைமுடி, கையில் சிலம்பு, கண்களில் கண்ணீர் எனக் கண்ணகியின் துன்பம் நிறைந்த தோற்றத்தை, இயல்பாக, உரிய சொற்கள் மூலம் கவிஞர் கூறுகிறார்.
* எனவே, இது தன்மையணி ஆகும்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

## மொழிப்பயிற்சி

1. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

இயற்கை - செயற்கை

இயற்கையை செயற்கையால் வெல்ல முடியாது.

தொடு - தோடு

தோடு போட உன் எதுகைகளைக் தொடு.

கொள் - கோள்

தெரிந்து கொள் பூமியும் ஒரு கோள் தான்.

சிறு - சீறு

சிறு பாம்பும் சீறும்.

தான் - தாம்

தான் என்று எண்ணாமல் தாம் என்று எண்ணவேண்டும்.

விதி - வீதி

கண்ணகி தன் விதியால் வீதியில் நின்றாள்.

2. எதிர்மறைச் சொற்களை எழுதுக.

மீளாத் துயர் ⇒ மீண்ட இன்பம்

கொடுத்துச் சிவந்த ⇒ கொடாமல் கருத்த

மறைத்துக் காட்டு ⇒ திறந்து காட்டாதே

அருகில் அமர்க ⇒ தொலைவில் நிற்க

பெரியவரின் அமைதி ⇒ சிறியவரின் ஆரவாரம்

புயலுக்குப் பின் ⇒ தென்றலுக்கு முன்

பார்த்த படம் ⇒ பார்க்காத படம்

எழுதிய கவிதை ⇒ எழுதாத கவிதை

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

3. ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை எழுதுக.

1. lute music ⇒ யாழிசை
2. chamber ⇒ அறை
3. to look up ⇒ எட்டிப் பார்த்தல்
4. grand-daughter ⇒ பேத்தி
5. rote ⇒ நெட்டுரு
6. didactic Compilation ⇒ நீதிநூல் திரட்டு.

4. தொடர்களில் உள்ள எழுவாயைச் செம்மை செய்க.

1. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.
   அழகிய கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.
2. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
   பயன் தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
3. வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
   மேடுபள்ளம் கொண்ட வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
4. கல்வியே ஒருவர்க்கு உயர்வு தரும்.
   சிறந்த கல்வியே ஒருவர்க்கு உயர்வு தரும்.
5. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.
   படித்து முடித்த குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

5. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக்கி எழுதுக.

கோல்டு பிஸ்கட் ⇒ தங்கக் கட்டி
யூஸ் ⇒ பயன்படுத்தி
வெயிட் ⇒ எடை
ஈக்வல் ⇒ சமம்
பட் ⇒ ஆனால்
எக்ஸ்பெரிமெண்ட் ⇒ பரிசோதனை
ரிப்பீட் ⇒ மறுபடியும்
ஆன்சர் ⇒ பதில்
ஆல் தி பெஸ்ட் ⇒ வாழ்த்துகள்

6. கலைச்சொற்கள்

1. Nanotechnology ⇒ மீநுண் தொழில்நுட்பம்
2. Biotechnology ⇒ உயிரித் தொழில்நுட்பம்
3. Space technology ⇒ விண்வெளித் தொழில்நுட்பம்
4. Cosmic rays ⇒ விண்வெளிக் கதிர்கள்
5. Ultra violet rays ⇒ புற ஊதாக் கதிர்கள்
6. Infra red rays ⇒ அகச் சிவப்புக் கதிர்கள்
7. Emblem ⇒ சின்னம்
8. Thesis ⇒ ஆய்வேடு
9. Intellectual ⇒ அறிவாளர்
10. Symbolism ⇒ குறியீட்டியல்
11. Aesthetics ⇒ அழகியல்
12. Artifacts ⇒ கலைப்படைப்புகள்
13. Myth ⇒ தொன்மம்
14. Terminology ⇒ கலைச்சொல்

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

# திருக்குறள்

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

## குறுவினா

1. கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.

* தன்னிடம் உள்ள பொருளை மறைத்து வைத்துத் துன்பம் தராத நல்லவர்.

2. தஞ்சம் எளியர் பகைக்கு - இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

தஞ்/சம் - நேர் நேர் - தேமா
எளி/யர் - நிரை நேர் - புளிமா
பகைக்/கு - நிரைபு - பிறப்பு.

3. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

* இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

## சிறுவினா

1. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

* ஒரு செயலைச் செய்யத் தேவையான கருவி, ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து, அரிய செயலைச் செய்பவரே அமைச்சர் ஆவார்.
* ஒரு அமைச்சருக்கு விடாமுயற்சியும் மனவலிமையும் வேண்டும்.
* குடிமக்களைக் காக்கும் பண்பு வேண்டும்.
* ஆட்சி முறைகளை அறிதல் வேண்டும்.
* இயற்கையான அறிவும், நூலறிவும் வேண்டும்.
* உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்படவேண்டும்.
* வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்தும்.

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

2. பலரிடம் உதவி பெற்றுக் கடன் உதவியால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

* சுற்றத்தாரிடம் அன்பு இல்லாதவர், எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.
* பகைவரின் வலிமையை எதிர் கொள்ள இயலாது.
* தம்மிடம் உள்ள பொருளை மறைத்து வைக்காமல், பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும்.

---

அலகிடுதல் - வாய்பாடு

நேர் நேர் ⇒ தேமா
நிரை நேர் ⇒ புளிமா
நேர் நிரை ⇒ கூவிளம்
நிரை நிரை ⇒ கருவிளம்

---

நேர்நேர்நேர் ⇒ தேமாங்காய்
நிரை நேர் நேர் ⇒ புளிமாங்காய்
நேர் நிரை நேர் ⇒ கூவிளங்காய்
நிரை நிரை நேர் ⇒ கருவிளங்காய்

---

நேர் ⇒ நாள்
நிரை ⇒ மலர்
நேர்பு ⇒ காசு
நிரைபு ⇒ பிறப்பு

---

தமிழ் எண்ணுரு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | ௧௦ |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

1. அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

## விண்வெளிப் பயணம்

மாநில அளவில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் நானும் எனது நண்பனும் முதல் பரிசு பெற்றோம். அதற்காக அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

பேரண்டப் பெருவெடிப்பு மற்றும் கருந்துளைகள் பற்றி, தெளிவான கருத்துகளை உலகிற்கு அளித்த ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் செய்யும் இனிய நாளும் வந்தது.

விண்வெளி ஓடத்தில் ஏறி அமர்ந்தோம். விண்வெளி ஓடம் பறக்கத் தொடங்கியது. வானில் பறப்பது நம்ப-முடியாததாக இருந்தது.

பால்வீதிகள், விண்கற்கள், தூசுகள், விண்மீன்கள், அருகில் தெரிந்த கோள்கள் என பலவற்றையும் கடந்து சென்றோம்.

ஸ்டீபன் ஹாக்கிங் விண்வெளி குறித்த அரிய செய்திகளை எங்களுக்குத் தெளிவாகக் கூறினார். அறிவியல் புத்தகத்தில் படித்த அனைத்தையும் அருகில் பார்த்தது மிகவும் வியப்பாக இருந்தது. பயணம் மிகவும் அற்புதமாக இருந்தது.

அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் செய்தது எங்கள் வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது. விண்வெளி ஓடத்திலிருந்து வெளியே வந்தபோது, எங்கள் மனதில் எதிர்காலத்தில் விண்வெளி வீரராக வர-வேண்டும் என்ற எண்ணம் உறுதியாக வலுப்பெற்றது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

வானம் தொட்டுவிடும் தூரம்தான்

2. "கற்கை நன்றே கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே" - வெற்றி வேற்கை. மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடர் ஏற்றிய கதையைப் பற்றிய உங்கள் கருத்துகளை விவரிக்க.

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

## புதிய நம்பிக்கை

### முன்னுரை

மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடர் ஏற்றிய கதையை இங்கு காண்போம்.

### புதிய நம்பிக்கை

* மேரி மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள்.
* மேரியின் பெற்றோர் சாம் - பாட்ஸி.
* மேரியின் குடும்பம் பருத்திக்காட்டில் வேலைசெய்து வந்தது.
* மேரியின் குடும்பத்தில் யாரும் படிக்கவில்லை.
* ஒருநாள், மேரி தன் தாயுடன் வில்சன் என்பவரின் வீட்டிற்குச் சென்றாள்.
* அங்கு மேசைமேல் இருந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்தாள்.
* வில்சனின் இளைய மகள், மேரியின் கையில் இருந்த புத்தகத்தை 'வெடுக்' எனப் பிடுங்கி, "உனக்கெல்லாம் படிக்கத் தெரியாது" என்றாள்.
* மேரிக்கு மிகவும் அவமானமாக இருந்தது. படிக்கவேண்டும் என்ற எண்ணம் மேரியின் மனதில் ஆழமாகப் பதிந்தது.
* அந்தச் சமயத்தில், மிஸ். வில்சன் என்பவரின் உதவியால் மேயெஸ்வில்லெ சென்று மேரி படிக்க ஆரம்பித்தாள்.
* மேரி பள்ளியில் புதிது புதிதாய் நிறையக் கற்றுக்கொண்டாள்.
* சில வருடங்கள் கழித்து, ஒரு வெள்ளைக்காரப் பெண்மணியின் உதவியால் மேரி மேல்படிப்புப் படிக்க டவுனுக்குப் புறப்பட்டாள்.
* மேரியை ஊரே வாழ்த்தி, வழியனுப்பி வைத்தது.
* மேரியின் பெற்றோர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

### முடிவுரை

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே - வெற்றிவேற்கை.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

பொதுக்கட்டுரை

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

1. விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்

முன்னுரை

ஓர் இலட்சியத்தை எடுத்துக்கொள். அதை நோக்கி நாள்தோறும் முன்னேறு. இறுதியாக உன் இலட்சியத்தை உறுதியாக அடையமுடியும். இதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் கல்பனா சாவ்லா.

பிறப்பு

ஹரியானா மாநிலம் கர்னால் 07.01.1961-ல் பிறந்தவர். பெற்றோர் பனாரசிதாஸ் - சன்யோகிதா.

கல்வி

ஆரம்பக்கல்வியை கர்னாலில் படித்தார். விமான ஊர்தி இயல் துறையை சண்டிகரில் படித்தார். விண்வெளித் துறைப் படிப்பை அமெரிக்காவில் படித்தார். விண்வெளித்துறையில் முனைவர் பட்டம் பெற்றார்.

முதல் விண்வெளிப்பயணம்

விமானம் ஓட்டப் பயிற்சி பெற்றார். மற்றவர்களுக்குப் பயிற்சி அளித்தார். நாசாவில் சேர்ந்தார். 1997-ல் விண்வெளியில் பயணம் செய்தார். 372 மணிநேரம் விண்வெளியில் பறந்து சாதனை புரிந்தார்.

இறுதிப்பயணம்

2003, ஜனவரி 16-ல் கொலம்பியா விண்கலத்தில் சென்றார். 16 நாட்கள் ஆய்வை முடித்து பூமிக்குத் திரும்பும்போது, விண்வெளியில் விண்கலம் வெடித்துச் சிதறியது. கல்பனா சாவ்லாவின் இறுதிப்பயணம் வானிலேயே முடிந்தது.

முடிவுரை

தன் கனவை நனவாக்கிய சாதனைப்பெண் கல்பனா சாவ்லா, நமது நாட்டிற்குப் பெருமை சேர்ந்தவர்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

"பெண்கள் நாட்டின் கண்கள்"

2. பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த
www.Padasalai.Net www.Trb Tnpsc.com
கதை/கட்டுரை/சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு - நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் - மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்.

## நூல் மதிப்புரை

**நூலின் தலைப்பு**

மதிப்புரை எழுதுவதற்கு எடுத்துக் கொண்ட நூலின் தலைப்பு 'பரமார்த்த குரு கதை'

**நூலின் மையப்பொருள்**

ஐந்து சீடர்கள் குருவின் மேல் கொண்டுள்ள பக்தியே நூலின் மையப்பொருள் ஆகும். விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்பது முக்கியமான கருத்து ஆகும்.

**மொழிநடை**

எளிதாகப் புரியக்கூடிய, நகைச்சுவை கலந்த மொழிநடை. சிறுசிறு வாக்கியங்கள் கொண்டது.

**வெளிப்படுத்தும் கருத்து**

மூடநம்பிக்கை கூடாது; அறிவைப் பயன்படுத்திச் செயல்களைச் செய்ய வேண்டும்.

**நூலின் நயம்**

உவமை, உருவகம், எடுத்துக்காட்டு, மேற்கோள் என பல்வேறு நயங்களைக் கொண்டுள்ளது.

**நூலின் கட்டமைப்பு**

தரமான தாள், தெளிவான அச்சு, ஏற்ற படங்கள் என நூலின் கட்டமைப்பு சிறப்பாக உள்ளது.

**சிறப்புக்கூறு**

தரமான சொற்கள் இந்நூலின் சிறப்புக்கூறு ஆகும். 'வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பதற்கு ஏற்ப இந்நூலைப் படித்தால் நோய் இராது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

**நூல் ஆசிரியர்**

இந்நூலின் ஆசிரியர் வீரமாமுனிவர் ஆவார்.

3. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்ததைக் கட்டுரையாக்குக. 23

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

## அரசுப் பொருட்காட்சி

**முன்னுரை**

நான் கோடை விடுமுறையில் எங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்தேன். அதைப்பற்றி இங்கு காண்போம்.

**அமைவிடம்**

எங்கள் ஊரில் உள்ள வ.உ.சி. திடலில் அரசுப் பொருட்காட்சி நடைபெற்றது. வ.உ.சி. திடல் மிகவும் பெரியது.

**அரங்குகள்**

பொதுப்பணி, காவல், சுற்றுலா, வனம், அறிவியல், வேளாண்மை, போக்குவரத்து, மின்சாரம் எனப் பல துறைகளைச் சேர்ந்த அரங்குகள் இருந்தன. ஒவ்வொரு துறையைப் பற்றியும் விளக்கமாகக் கூறினார்கள். எனது சந்தேகங்களுக்குத் தெளிவாக விளக்கம் அளித்தார்கள். அரசுத் துறைகள் பற்றி நான் நன்கு அறிந்து கொண்டேன்.

**அங்காடிகள்**

வீட்டு உபயோகப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் எனப் பல அங்காடிகள் இருந்தன. மக்கள் கூட்டம் இங்கு மிக அதிகமாக இருந்தது.

**பொழுதுபோக்கு அம்சங்கள்**

ஊஞ்சல், இராட்டினம், பாதாளக் கிணறு, பேய்வீடு, மீன்காட்சி சாலை, பனிவீடு, நீர் விளையாட்டு என, பொழுதுபோக்கு அம்சங்கள் இருந்தன.

**நிகழ்கலைகள்**

கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், புலி ஆட்டம் போன்றவை மிகவும் அற்புதமாக இருந்தன.

**உணவு அரங்குகள்**

உணவகம், இனிப்பகம், பனிக்கூழ் கடைகள், அப்பளக் கடைகள் போன்றவை பொருட்காட்சிக்கு சுவை கூட்டின.

**முடிவுரை**

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

பொருட்காட்சிக்குச் சென்றது நல்ல அனுபவமாக இருந்தது. நீங்களும் சென்று வாருங்கள்.